உ

சிவமயம்

## சுழிபுரம் - பறாளாயம்பதி

## அருள்மிகு சிவசுப்பிரமணியர்

# பிள்ளைத்தமிழ்



ஆக்கம்:

இணுவிலாசிரியர், அளவைவாசர்

புலவர் வை. க. சிற்றம்பலம்

21-05-1997

உ

சிவமயம்

# சுழிபுரம் - பறாளாயப்பதி
# அருள்மிகு சிவசுப்பிரமணியர்
# பிள்ளைத்தமிழ்.



ஆக்கம்:


இணுவிலாசிரியர், அளவைவாசர்
புலவர் வை. க. சிற்றம்பலம்


விலை: ரூபா 15·00

பிள்ளைக் கவி.

மருவூர்க்கு 1, 3, 5, 7, 9, 11
ஆகவும் பாடலாம்.

ஆதாரம் :-

பிரபந்த தீபிகை - பக்: 27.

ஆசிரியர்

வெப்பத்தூர் சுந்தர வேங்கட
சுப்பைய நாவலர்.

உ

## சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்ரமணியர் பிள்ளைத்தமிழ்

# முகவுரை

மட்டுவிலூர் தந்த மகான் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களை ஒருநாள் யான் சந்தித்த போது திருமுருகன் பாதமலர்த் தேன் என ஆரம்பித்து நல்லூர் முருகனைப் பாடு என்று அன்புக்கட்டளையிட்டு, ஆசியும் வழங்கினார்கள். அதன்படி நல்லூர் முருகவேளின்மேல் "வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையும் விரவ" நூறு செய்யுள்களை "இணைமணி மாலை" என்னும் பெயரில் 1994ல் வெளியிட முருகமூர்த்தியின் துணை கிடைத்தது. அதன்பின் அடியேனது நேரத்தைத் துஷ்பிரயோகஞ் செய்யாது பலபிரபந்தங்களை மரபுவழியாக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

1. நல்லூர் இணைமணி மாலைக்கும்
2. விபுலானந்தர் நான்மணி மாலை நூலுக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் முதலாவதாகத் தேர்ந்தெடுத்துப் பணமும் பாராட்டும் உதவியது இந்த வகையில் சென்ற பெப்றவரி, மார்ச் மாதங்களில் நான், சுழிபுரம் பறாளாயில் எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியப் பெருமான் மீது ஒருசிறு "பிள்ளைத்தமிழ்" பாடவேண்டுமென அம்முருகனை வேண்டிய அக்கணம், அற்புதமாக "முத்தைத்தரு பத்தித்திரு" என்ற அடி முதல் ஒலித்தது அதனால் பிள்ளைப் பெருமான் என்று அப்பெருமானைப் பாட எனது மனம் விரும்பியது எனவே இப் பிள்ளைத்தமிழைப் பாடினேன்.

பாரம்பரியமாக பிள்ளைத் தமிழ் நூறு செய்யுள்களால் பாடுவது வழக்கம் எனினும் பத்துப் பருவங்களுக்கும் பத்துப் பாட்டுப் பாடிய புலவர்களும் உளர்.

ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த இணுவில் சின்னத்தம்பிப் புலவர் அருள்மிகு சிவகாமி அம்மை மீது பத்துப் பருவத்துக்கும் பத்துப் பாடல் பாடியதாக ஆசிரியை கார்த்திகாயினி எழுதிய சின்னத்தம்பிப் புலவர் சரித்திரம் கூறுகிறது "சிவகாமி தமிழ்" என்னும் நூலில் தமிழவேள் அவர்களும் இதனை வலியுறுத்தி எழுதியுள்ளனர். வேறு பிறரும் இவ்வாறு பாடியுள்ளனர்.

இணுவிற் சின்னத்தம்பிப் புலவர் பாடிய சிவகாமி யம்மை பிள்ளைத் தமிழே ஈழத்தின் முதற் பிள்ளைத் தமிழென்பர். சுழிபுரம் பறாளாய்ப் பதியை மாத்திரம் மையமாகக் கொண்டு இப் பிள்ளைத் தமிழை நான் பாடியுள்ளேன்.

பறாளாய் விநாயகர் பள்ளு நல்லூர்ச் சின்னத் தம்பிப் புலவராற் பாடப்பட்ட தொன்மை வாய்ந்தது.

அவ்விநாயகப் பெருமான் கோயிலின் வடபால மைந்ததுதான் இந்த முருகன் கோயில். இவ்வாலயம் பற்றி இக் கோயிற் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா (J. P) அவர்கள் 13-11-96ல் எழுதிய நூலில் எல்லா வரலாறுகளையுஞ் சுருக்கமாக வெளியிட்டுள்ளார்கள்

ஓய்வு பெற்ற ஆசிரியரும் புலவரும் சுமார் எண் பத்து மூன்று வயது தொடர இருக்கும் அடியேன் மேலும் எழுத விரும்பவில்லை

இப் பெருமானைப் பாடிப் பரவித் தொண்டு செய்யும் அன்பர்களும், நிர்வாகிகளும், ஏனையோரும் இப்பெருமானடி சிந்தித்து என்றும் வந்தித்துக் கடைத்தேற பிரார்த்திக்கின்றேன். யாவரும் ஏற்றுப் போற்றிப் பயன டைவார்களாக.

சை. க. சிற்றம்பலம்
நூலாசிரியர்

உ
சிவமயம்

# அணிந்துரை

"தஞ்சுமேதி சுறாக்களைச் சிறச்
சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறும்
இஞ்சி வேலியின் மஞ்சளில் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே" என்று

ஏற்றிப் போற்றும் ஈழமணித் திருநாட்டின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தின் மேற்றிசை யமைந்த சுந்தரஞ்சேர் சுழிபுரத்தில் கோயில் கொண்ட பறாளை முருகனின் சிறப்பைப் பல்லோர் பாடிப் பரவினர்.

"யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமேபெற வேலவர் தந்ததனால்" என்ற அருணகிரி நாதரின் கூற்றுக்கு இயைந்த வரும் இசைந்தவருமாகிய வை. க. சிற்றம்பலம் அவர்கள் வைகாசி மாத விசாகப் பெருநாளில் அவன் புகழ்பாட அவாவுற்றார் போலும் அவனருளாலே அவன்தாள் வணங்கிச் சிந்தை மகிழ பறாளை முருகன் மேல் பிள்ளைத் தமிழ் பாடிய பாங்கையும் செயலையும் பாராட்டாமல் இருக்க முடியாது எங்கள் பறாளை முருகனை தாம்பாடிய பிள்ளைத் தமிழில்

"அருளாளர் போற்றிடும் பறாளையருள்
சிவசாமி" என்றும்

"முத்திநல மீய்ந்து நாற் சித்தி தரும் பறாளை
யெம் முருகனே" என்றும்

"காலா காலமாய்ப் பறாளை வளர்ந்திடும்
கந்தா தாலேலோ
கற்பகமே யென்தன் அற்புதமே யருட்
கண்ணே தாலேலோ" என்றும்

"அன்னம் வயல்சூழ் சுழிபுரஞ்சேர்ந்த
அழகா முத்தம் தருவாயே
ஆறுமுகனே பறாளை யருளும்
அன்பே முத்தம் தாராயே" என்றும்

"ஏற்றநல் வரங்க ளீய்ந்து
எழில் சுழி புரத்திலுயர்
பறாளையி லெழுந்தருளி
எஞ்ஞான்றும் வாழி! வாழி!"

என்றும் பன்னிப் பன்னிப் பாடுவது படிப்போருள்ளத்தில் பரவசத்தை ஊட்டுகின்றது. பாவலரது நாவன்மையும் சொல் வன்மையும் எமையெலாம் சொக்க வைக்கின்றது நுண்மாண் நுழை புலத்தையும் தெற்றெனத் தெளியவைக்கின்றது.

அன்பர் வை. க. சிற்றம்பலம் அவர்கள் அளவையூர் கும்பழாவளைப் பிள்ளையார், இணுவில் அரசோலை கப்பனை விநாயகர், நல்லூர் முருகன் ஆகிய தெய்வங்கள் மேற் பத்திப் பரவசமாகப் பாடியது போல எம் பறாளை முருகன் மீதும் பக்திப் பிரவாகமாக பாடிய பாடல்கள் எல்லோரையும் அவன் புகழை எண்ணவும், அவன் அருளை வேண்டவும் அருட் சுரபியாகத் திகழ்கின்றதெனலாம். பாவலர் பல்லாண்டு வாழ பறாளை முருகனின் தர்மகர்த்தா சபை பன்னிருகரத்தனை பணிந்தேத்துகின்றது.

சுழிபுரம் பறாவளாய்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
கோயிற் தர்மகர்த்தா சபை
21-05-1997

வே. [illegible]
தலைவர்

உ



## காப்பு

(எண்சீராசிரிய விருத்தம்)

முத்தைத்தரு பத்தித்திரு
என்றேயடி யெடுத்து
முருகன்பெரு வரமீய்ந்திட
முன்னோன்வதி விடமாம்
சித்தர்தொழும் பறாளாப்பதி
செவ்வேள்பதந் தொழுதே
சேயோர்வழி தழைக்கவொரு
செம்மல் வரம் வேண்டி
மெய்த்தப்புகழ் பிள்ளைத்தமிழ்
விரும்பியுளங் களித்தே
மேன்மக்களும் வாழ்த்தும்படி
மேவிக் கவி பாட
அத்தன்தனை ஆனைமுகத்
தைந்துகரன் தன்னை
அடியேனை மிருந்தேதமிழ்
அருளும்படி தொழுதேன்

## 1. காப்புப் பருவம் (1-3 ம்)

*(பன்னிரு சீர்க் கழி நெடிலடியாசிரிய விருத்தம்)*

பொன்னாலைத் திருமாலும்
புரிதில்லைக் கூத்தினனும்
புனிதைசிவ காமியுமையும்
புகல்மூலத் தைங்கரனும்
பொருவில்மறை மலரயனும்
புண்ணியன் முருகவேளும்
மன்னாதி மன்னனெனக்
காவல்புரி வைரவனும்
மகாலட்சுமி வாணியும்
மதியூட்டு நவகோளும்
சண்டேசர் பாதமுமென்
மனமலரி லேத்தி வாழ்வாம்
பன்னாள்செய் குறைதீரப்
பரமனருட் பிழம்பாகி
பாலனாய்ச் சரவணத்தில்
பண்புட னுதித் தன்னை
பாலுண்டு பாயலெனப்
பங்கயத் தொட்டிலேறி
முன்னாளிற் சோழர்புரி
யெனுஞ்சுழிபு ரத்திலே
மூர்த்திதலந் தீர்த்தமொன்றாய்
முத்திநல மீய்ந்துநற்
சித்திதரும் பறாளையெம்
முருகனைக் காக்கவென்றே,

## 2. செங்கீரைப் பருவம் (3-5 மீ)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

சங்குவளைக் கரமூன்றிச்
செம்பவள வாய்கனியச்
சல்லாப வுல்லாசமாய்ச்
சார்ந்தகிண் கிணியாடச்
சூழ்ந்தமணிச் சிலம்பார்ப்பத்
தாளூன்றிக் கீர்கீரென
எங்குநீ யங்குநான்
என்றபடி மழலைமொழி
யிசைத்திட வடியெடுக்கும்
இனியகுக குமரனே
என்றுன்னை யன்பொழுக
ஏத்தியே வாழ்த்துகின்றேன்
பங்கயத் தடாகமதில்
செந்தமிழ்க் குழவியாய்ப்
பாராட்ட வந்தபாலா
பாராண்ட நங்குடியின்
சீரோங்கி வாழ்வுபெறப்
பரமவொரு வரமீய்ந்திடாய்
அங்கயற் கண்ணியுமை
செங்கைவளர் செல்வமே
செங்கீரை யாடியருளே
அருளாளர் போற்றிடும்
பறாளையருள் சிவசாமி
செங்கீரை யாடியருளே.

## 3. தாலப்பருவம் (5-7 மீ)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

### வேறு

பாலுடன் தேனும் பலகனி வகையும்
பஞ்சா மிர்தவகையும்
பனிநீ ரிளநீர் சாந்துட னாடி
பரிந்தகிற் புகைகமழ
மேலாகியதிரு நீறுடன் பொட்டும்
விளங்க மணிமாலை
மேலிடப் பட்டுஞ் சுட்டியும் விளங்க
மேன்மைக் கதைகூறி
நாலா கியமறை யந்தணர் வாழ்த்த
நங்கையர் புடைசூழ
நகையிள முறுவ லிளங்கதிர் வீச
நவில்கழல் கரமாட
காலா காலமாய்ப் பறாளை வளர்ந்திடும்
கந்தா தாலேலோ
கற்பக மேயென்றன் அற்புதமேய நட்
கண்ணே தாலேலோ

## 4. சப்பாணிப் பருவம் (7-9 மீ)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

வேறு

கற்பக மென்று சொல்
லற்புத விநாயகர்
காணியின் வடபாங்கர்
கந்தநின் வேலின்முன்
கந்தபு ராணத்தைக்
காப்புடன் படித்துவந்தார்
பொற்புறு முன்றன
தாடலி னடியவர்
பொன்னெடுங் கோயில்கட்டி
புத்தமிர் தோடுநற்
பூசைகள் செய்தனர்
பொன்மல ரர்ச்சித்தார்
அற்புத மாகவே
அன்னவ ருவந்திட
ஆயிரம் வரமீய்ந்தாய்
அருங்கலை திருமணம்
மணிமனை மக்களும்
அன்பினர் பெற்றுய்ய
கொற்றவர் பணிந்திடும்
வெற்றிநல் வேலவா
கொட்டுக சப்பாணி
கொள்ளையின் பந்தரும்
குழந்தை பறாளையாய்
கொட்டுக சப்பாணி.

## 5. முத்தப் பருவம் ( 10 11 மீ )

(பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

### வேறு

பொன்னும் புகழும் புவனியின்மேற்
பொருளா யெல்லா மிருந்தாலும்
பூத்து மலரும் மரபினுக்கோர்
பொருளா மகவே யொருமுத்தாம்
பன்னும் பொருளே முத்தாகப்
பரந்த வுலகம் போற்றிசெயும்
பரமன் தனக்கு உன்னைப்போல்
பகரும் முத்து வேறுளதோ
மன்னு முயர்ந்த முத்தமெலாம்
மலர்ந்த வுன்வாய் முத்தினுக்கு
மதிக்கப் படுமோ வஃதேபோல்
மகவாயெமக்கோர் முத்தினிக்க
அன்னம் வயல்சூழ் சுழிபுரஞ்சேர்
அழகா முத்தந் தருவாயே
ஆறு முகனே பறாளைவரும்
அன்பே முத்தந் தருவாயே.

## 6. வாரானைப் பருவம் (12-13ம்)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

வற்றா வளஞ்சேர் சோழபுர
மக்கள் வாழுஞ் சுழிபுரத்தில்
வணங்கு மடியா ருயரன்பால்
மகிழ்ந்து வந்த குமரோனே
பற்றா யடைந்த திருக்கோயிற்
பத்தர்க் கருள விருப்பவனே
பனிநீ ரிளநீ ரானைந்தும்
பண்பி னாட்ட வமர்ந்தவனே
உற்றே யுன்ற னற்புதத்தால்
ஓடி யுயர்ந்த சரணடைந்தேன்
உண்மைப் பொருளே மக்களெனும்
உரிமைப் பொருளாம் புத்திரரைப்
பெற்றே மகிழ வரமளிக்கும்
பெருமான் வருக பறாளையெனும்
பெரிய குறிஞ்சி விளையாடும்
பிரானே வருக வருகவே.

## 7. அம்புலிப் பருவம் (14-15 மீ)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

### வேறு

அம்புலீ யம்புலீ
யென்றுனைக் கூவிட
அரியகதிர்க் கரநீட்டுவாய்
அரனுடைய தனிமுடியிற்
பிறையென விளங்குவை
யம்மைமடி முருகனைப்பார்
சம்புதரு மிளையமகன்
சரவணத் துதித்தவன்
சண்முகப் பெயரணிவனோ
சத்திதரு வேலினன்
மெத்தவடி வழகினன்
சதுர்மறையும் போற்று மொருவன்
கும்பமுனிக் கருளியவன்
அம்புயனைக் குட்டியவன்
குருவானா னீசற்குமே
கோதிலா வடியருடன்
இராமர்திரு வடிநீழல்
சோழியர் புரத்தமர்ந்தான்
அம்பவளத் திருமேனி
சங்கவளைக் கையனுடன்
அம்புலீ யாடவாவே
அருள்மருவு பறாளையிற்
கோயிலுறை முருகனுடன்
அம்புலீ யாடவாவே.

8. சிற்றிற் பருவம் (16-17ம்)

*(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)*

சிற்றாடை யோடுமேற்
பட்டாடை சுற்றியிரு
செங்கைதனில் வளைகுலுங்க
சிறுபொட்டு நுதலிட்டு
செறிகுழையிற் கண்ணோட
சேவடி யெடுத் தெடுத்து
பற்றாரு முத்தினொடு
சம்புத்துறை மணல் கொண்டு
பாலசிறு மியரமைத்த
பாங்கான அறையா
டரங்கமணி மண்டபப்
படருமொளி யழகுகண்டே
வற்றாத அன்புடைய
பத்தருக் காளாகி
வாழவர மளிக்குமுருகன்
வளர்தண்டை கிண்கிணி
சிலம்பார்ப்பச் செம்பவள
வாய்முறுவ லோடுவந்தே
சுற்றாரு மணிமாடச்
சோழிய புரத்தெமது
சுடர்நெடுஞ் சிற்றில் சிதையேல்
தோகைமயி லேறிநற்
பறாளையி லுலாவிடுஞ்
செல்வனே சிற்றில் சிதையேல்

## 9. சிறுப்பறைப் பருவம் (18-19 மீ)

(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ஆதியாம் யாழ்ப்பாணத்
தமைந்தவூர் சுழிபுரத்
தன்பர்கள் ஒன்றுகூடி
ஐயனே யுனை வேண்டி
அருள்ஞான வேல்நாட்டி
அநவரதம் புராணமோதி
நீதிசெய் சரியையிலுங்
கிரியையிலு நின்றவர்கள்
நினையோகத் தாலுணர்ந்தே
நெடுவானந் தொடுங் கோயில்
நிறைவேற்றிப் பெருஞ் சாந்தி
நிறைவிழாச் செய்து மகிழ்வார்
பேதியா தவர் வேண்டும்
வரங்களில் மரபுய்யும்
பிள்ளைப்பே றளித்தலாலே
பிள்ளைப்பெரு மாளெனும்
காரணத் திருநாமம்
பெற்றனை யதுசிறக்க
சோதியா யெழுந் தெமது
வழிவளர மங்கலச்
சிறுபறை முழக்கியருளே
திகழுமறை யொலியறாப்
பறாளையருள் முருகனே
சிறுபறை முழக்கியருளே.

## 10. சிறுதேர்ப் பருவம் (20-21 மீ)

*(பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)*

வானுலகு மண்ணுலகும்
வல்லபா தலவுலகும்
வடிவமையுந் திருத்தேரிலே
வட்ட நடுப் பீடமே
பிரணவக் குறியாகி
வந்ததனில் வீற்றிருந்து
பானிலவு திருநீற்றி
னடியவர்தம் வினையோடப்
பணிந்துதேங் காயுடைத்து
பகாவேதப் பரிகடவி
அரிய மணி வீதிவரும்
பாலகும ரேச முருகா
நானிருக் கப்பய
மேனுனக் கென்று நிதம்
நல்லுரைகள் சொல்லிச் சொல்லி
நனவிலுங் கனவிலும்
நலிந்துவரு காலத்தும்
நற்காட்சி காட்டி நின்றே
தேனிலவு நின்றனருள்
வரத்தின்வ ந பாலருடன்
சிறுதே ருருட்டி யருளே
சிவஞான வேலுடைச்
சண்முகா பறாளையிற்
சிறுதே ருருட்டியருளே

முற்றிற்று

வேறு

(பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவமே
என்ஞான்றும் வாழி வாழி

மங்கலநல் லொலியோடு
மறையொலியும் பண்ணொலியும்
மக்கள்தம் மொலியும் விளங்க
மாரனா ராயிரவர்
பேரழகு பிறங்கிடும்
மணிமார்பன் வேலன் முருகன்
தங்கநிறக் குடைகளுடன்
ஆலவட்டங் கொடிகள்
தயங்கியிரு பாலும் விளங்க
சதுர்முகனுந் திருமாலும்
இந்திரனுங் கணங்களுடன்
தகவுடன் போற்றி வாழ்த்த
பொங்கிமிளிர் பட்டாடை
பஞ்சகச் சத்தினொடு
புகழ்மாலை யும்புனைந்து
பொன்னின்நிகர் வள்ளிதெய்
வானைபுடை சூழ்தர
பொறிமயிலில் வீற்றிருந்து
எங்கணு நிறைந்தவுயிர்
வர்க்ககோ டிகட்கெலாம்
ஏற்றநல் வரங்க ளீந்து
எழிற்சுழி புரத்திலுயர்
பறாளை வேல் முருகனே
என்ஞான்றும் வாழி வாழி

சுபம்

மூத்த பெரும் புலவர், கலாபூஷணம்
வை. க. சிற்றம்பலம் அதிபர்
திண்ணைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

ஸ்ரீ ஜோதி அச்சகம்
சங்கானை